2021

වාර්ෂික වාර්තාව

வருடாந்த அறிக்கை

ANNUAL REPORT



GALLE
HERITAGE
FOUNDATION

ගාලු උරුමය පදනම

ජාතික උරුම,ප්‍රාසාංග කලා හා ග්‍රාමීය කලා ශිල්පී ප්‍රවර්ධන කටයුතු රාජ්‍ය අමාත්‍යාංශය

காலி மரபுரிமை மன்றம்
தேசிய மரபுரிமைகள், அருங்கலைகள் மற்றும் கிராமிய சிற்பக்கலைகள் மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சு

Galle Heritage Foundation

State Ministry of National Heritage, Performing Arts and Rural Arts Promotion

வருடாந்த அறிக்கை 2021

GALLE
HERITAGE
FOUNDATION

காலி மரபுரிமை மன்றம்

தேசிய மரபுரிமைகள், நிகழ்த்துக்கலைகள் மற்றும் கிராமியக் கலை மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சு

முகவரி : இல. 12, ராம்பாட் வீதி, கோட்டை, காலி
தொலைபேசி: 091-2246784 / 091-2231982
தொலைநகல்: 091-2246784
மின்னஞ்சல் : herifo@sltnet.lk
இணையம் : www.galleheritage.gov.lk

உள்ளடக்கம்

காலி மரபுரிமை மன்றம்.....48

1.2 காலி மரபுரிமை மன்றத்தின் தூர நோக்கு, செயற்பாட்டு நோக்கு மற்றும் மதிப்புக்கள்.....48
1.3 காலி மரபுரிமை மன்றத்தின் அதிகாரத்தினுள் உள்ள பிரதேசம்.....49
1.3.1 காலிக் கோட்டையின் வரைபடம்.....49
1.3.2 காலிக் கோட்டையின் பௌதீகச் சூழல்.....49
1.4 காலி மரபுரிமை மன்றத்தின் பிரதான பிரிவுகள்.....50
1.5 காலி மரபுரிமை மன்றத்தின் பணிநிலை நிறுவனக் கட்டமைப்பு.....51
1.6 காலி மரபுரிமை மன்றத்தின் உத்தியோகத்தர் குழு.....52
1.6.1 உத்தியோகத்தர்களின் சம்பள அளவுகள்.....53
1.6.2 உத்தியோகத்தர்களின் சேவைக்காலம்.....54
1.6.3 2021 இல் உத்திகோகத்தர் குழுவில் இடம்பெற்ற மாற்றங்கள்.....55
1.6.4 காலி மரபுரிமை மன்றத்தில் பணிபுரிந்த தலைவர்கள்.....55
1.6.5 காலி மரபுரிமை மன்றத்தில் பணிபுரிந்த பிரதம நிறைவேற்று அதிகாரிகள்.....56
1.6.6 காலி மரபுரிமை மன்றத்தில் பணிபுரிந்த நிர்வாக அதிகாரிகள்.....56
1.7 காலி மரபுரிமை மன்றத்தின் நிர்வாகம் மற்றும் முகாமைத்துவம்.....56
1.7.1 2021 ஆம் ஆண்டுக்கான முகாமைத்துவ சபையின் அமைப்பு பின்வருமாறு:-..... 57-58

II அத்தியாயம்.....59

2021 இல் காலி மரபுரிமை மன்றத்தால் செயற்படுத்தப்பட்ட திட்டங்கள்.....59
2.1 பொது நிகழ்ச்சிகள்.....59
2.1.1 புதுவருடத்தைக் கொண்டாடுதல் - 01.01.2021.....59
2.2 அபிவிருத்திச் செயற்றிட்டங்கள்.....59
2.2.1 காலி மரபுரீமை மன்றத்தின் பிரதான அலுவலகம் அமைந்துள்ள கட்டிடத்தை புனரமைக்கும் செயற்றிட்டம்.....59
2.2.2 காலிக் கோட்டையில் அரச நிறுவனங்களுக்குச் சொந்தமான பாரம்பரியக் கட்டிடங்களைப் பேணிப் பாதுகாக்கும் திட்டங்களைத் தயாரித்தல்.....60
2.2.3 பழைய பொலிஸ் குடியிருப்புக் கட்டிடத்தை பேணுதல்.....61
2.2.4 காலிக் கோட்டையினுள் குறுந்தெருக்களை அபிவிருத்தி செய்தல்.....62
2.2.5 உள்ளூர் உணவு விற்பனை நிலையம் "காலு பொஜ்ன".....63
2.2.6 சந்திரக் காட்சிக்கூடத்தின் வளர்ச்சி.....64
2.2.7 காலிக் கோட்டையில் கலங்கரை விளக்கத்திற்கு அருகில் கடல் நீராடும் இடத்தின் அபிவிருத்தி.....64
2.2.8 காலி மரபுரிமைகள் மன்றத்தின் சுற்றுலாப் பயணிகள் தகவல் மையத்தின் மேம்பாடுகள்.....65
2.3 ஏனைய நிகழ்வுகள்.....66
2.3.1 கலைப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்குதல்.....66
2.3.2 இராஜாங்க அமைச்சரின் விஜயம்.....67
2.3.3 இராஜாங்க அமைச்சின் செயலாளரின் விஜயம்.....67
2.3.4 இராஜாங்க அமைச்சர் மற்றும் செயலாளரின் விஜயமும் கள ஆய்வும்.....68
2.3.5 2021 தணிக்கை அறிக்கை அறிக்கை தமிழ் பதிப்பு.....69-74
2.4 2021 இல் காலி மரபுரிமை மன්றத்தின் செயற்திறன் தொடர்பான பிற சுருக்கமான அறிக்கை.....75

I அத்தியாயம்

காலி மரபுரிமை மன்றம்

1.1 அறிமுகம்

1971ஆம் ஆண்டில் காலிக் கோட்டை தொல்பொருள் நினைவுச் சின்னமாக அறிவிக்கப்பட்டதுடன், 1988 ஆம் ஆண்டில் யுனெஸ்கோவின் உலக மரபுரிமைத் தளங்களின் பட்டியலிலும் இடம்பெற்றது. இக்காரணத்தால் அரசினதும் பொது மக்களினதும் கணிசமான கவனத்தை காலிக் கோட்டை பெறத் தொடங்கியது. இதன் விளைவாக, இதனைப் பேணுவது மற்றும் அதன் பாதுகாப்புத் தொடர்பாக பல்வேறுபட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இவற்றில் முக்கியமானது, 1994 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தின் மூலம் காலி மரபுரிமை மன்றம் நிறுவப்பட்டமையாகும். காலி மரபுரிமை மன்றம் பல்வேறு அமைச்சுக்களின் கீழ் இயங்கி வந்துள்ளதுடன் தற்போது தேசிய மரபுரிமைகள், நிகழ்த்துக்கலைகள் மற்றும் கிராமியக் கலை மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சின் கீழ் இயங்குகின்றது.

1.2 காலி மரபுரிமை மன்றத்தின் தூர நோக்கு, செயற்பாட்டு நோக்கு மற்றும் மதிப்புக்கள்

தூர நோக்கு

"2025 ஆம் ஆண்டளவில் உலக மரபுரிமை நகராகிய காலிக் கோட்டையை இலங்கையின் தனித்துவமிகு கலாசார, சுற்றுலாத் தலமாக உருவாக்குதல்"

செயற்பாட்டு நோக்கு

"காலி கோட்டையை வரலாற்றுக் கலாசார மையமாகவும், தொல்பொருளியல் முக்கியத்துவம் வாய்ந்த இடமாகவும் பேணிப் பாதுகாத்து சிறந்த சுற்றுலா நகரமாக மேம்படுத்துதல்"


மதிப்புக்கள்

- உலகளாவிய ரீதியல் தனித்துவமான மதிப்பைக் கொண்ட உலக மரபுரிமைத் தளமாக காலிக் கோட்டையை அபிவருத்தி செய்வதற்குப் பங்களித்தல்
- காலிக் கோட்டையின் தொல்பொருளியற் சிறப்புத் தன்மையைப் பாதுகாப்பதுடன் அது ஒரு கவர்ச்சியான சுற்றுலாத் தலமாக இருப்பதற்குத் தேவையான வசதிகளை வழங்குதல்
- சமூகத்தின் கருத்துக்களுக்கு மதிப்பளித்து, தீர்மானங்கள் மேற்கொள்ளும்போது அவர்களின் பங்களிப்பைப் பெறுவதன் மூலம் காலிக் கோட்டையை உலக மரபுரிமைச் சின்னமாக பேணுதல்
- மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் பங்களிப்புச் செய்தல்

1.3 காலி மரபுரிமை மன்றத்தின் அதிகாரத்தினுள் உள்ள பிரதேசம்

காலிக் கோட்டை மதிலால் சூழப்பட்ட அனைத்துப் பிரதேசங்களும் காலி மரபுரிமை மன்றத்தின் அதிகார வரம்புக்குள் வருவதுடன் 14 காவலரண்களை உள்ளடக்கிய கோட்டைச் சுவரின் நீளம் 2.5 கி.மீ. ஆகும்.

1.3.1 காலிக் கோட்டையின் வரைபடம்




1.3.2 காலிக் கோட்டையின் பௌதீகச் சூழல்

இலங்கையின் தென் மாகாணத்தில், காலி மாவட்டத்தில், காலி நான்கு கடவைகள் பிரதேச செயலகப் பிரிவில், '96னு – காலிக் கோட்டை' கிராம அலுவலர் பிரிவில் ஏறத்தாள 32.7418 ஹெக்டெயார் (80.9067 ஏக்கர்) வி'தீரணத்தைத் தன்னகத்தே கொண்டதாக காலிக் கோட்டை அமைந்துள்ளது.

1.4காலி மரபுரிமை மன்றத்தின் பிரதான பிரிவுகள்



1.5 காலி மரபுரிமை மன்றத்தின் பணிநிலை நிறுவனக் கட்டமைப்பு



1.6 காலி மரபுரிமை மன்றத்தின் உத்தியோகத்தர் குழு

தொடர் இல.	பெயர்	பதவி
1.	திரு. பராக்கிரம தஹநாயக்க	தலைவர்
2.	திரு. சுனில் தஹநாயக்க	பணிப்பாளர் ∴ பிரதம நிறைவேற்று அதிகாரி
3.	திரு. டப்ளியூ. ஆர். பி. அனுருத்த	கணக்கியல் உத்தியோகத்தர்
4.	திரு. எல். ஏ. தரங்க பு'பகுமார	அபிவிருத்தி உத்தியோகத்தர் - செயற்திட்ட உதவியாளர்
5.	திருமதி. பி.ஜீ.என். சந்திமாலி	அபிவிருத்தி உத்தியோகத்தர் - செயற்திட்ட உதவியாளர்
6.	திருமதி. எஸ். பி. லோக்குலியன	அபிவிருத்தி உத்தியோகத்தர் - செயற்திட்ட உதவியாளர்
7.	திருமதி. ரித்மி நானயக்கார	அபிவிருத்தி உத்தியோகத்தர் - செயற்திட்ட உதவியாளர் (கணக்கியல்)
8.	திரு. ஆர். ஆர். என். ரணசிங்க	அபிவிருத்தி உத்தியோகத்தர் - செயற்திட்ட உதவியாளர்
9.	திரு. ஆர். ஏ. என். பி. மதுசங்க	அபிவிருத்தி உத்தியோகத்தர் - செயற்திட்ட உதவியாளர்
10.	திருமதி. பீ. எஸ். இல்லேபெரும	முகாமைத்துவ உதவியாளர்
11.	செல்வி. டப்ளியூ. டீலானி ஹர்சிகா	முகாமைத்துவ உதவியாளர்
12.	திருமதி. எம். எச். இ'ானி பிரியதர்'னி	முகாமைத்துவ உதவியாளர்
13.	திருமதி. எம். எச். பாத்திமா பௌஸானா	முகாமைத்துவ உதவியாளர்
14.	திரு. ஏ. ஜி. சமன் குமார	காரியாலய காரிய உதவியாளர்
15.	திரு. எம். எல். எஸ். ஜெயசேகர	நடமாடும் பாதுகாப்புக் காவலர்
16.	திரு. டப்ளியூ. ஜீ. நந்தன சமந்த	நடமாடும் பாதுகாப்புக் காவலர்
17.	திரு. எம். என். ஈ. சிரந்த டி சில்வா	ஓட்டுனர்

1.6.1. உத்தியோகத்தர்களின் சம்பள அளவுகள்

தொடர் இல.	பதவி	சம்பளக் குறியீட்டு எண்	அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை	தற்போது சேவையில் உள்ளோரின் எண்ணிக்கை
1.	தலைவர்	கொடுப்பனவு சுற்றறிக்கை இல. ″னு 2015/3 இன் பிரகாரம் வழங்கப்படுகின்றது.	01	01
2.	பணிப்பாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி	ஆஆ 1-1	01	01
3.	நிர்வாக அதிகாரி	துஆ 1-1	01	01
4.	கணக்கியல் உத்தியோகத்தர்	துஆ 1-1	01	01
5.	அபிவிருத்தி உத்தியோகத்தர் செயற்திட்ட உதவியாளராக பணிபுரிதல்	ஆயு 3	05	05
6.	அபிவிருத்தி உத்தியோகத்தர் செயற்திட்ட உதவியாளராக (கணக்கியல்) பணிபுரிதல்	ஆயு 3	01	01
7.	முகாமைத்துவ உதவியாளர்	ஆயு 1-1	04	04
8.	காரியாலய காரிய உதவியாளர்	″டு 1	01	01
9.	நடமாடும் பாதுகாப்புக் காவலர்	″டு 1	04	02
10.	ஓட்டுனர்	″டு 3	01	01

1.6.2 உத்தியோகத்தர்களின் சேவைக்காலம்

தொடர் இல.	பெயர்	பதவி	சேவைக் காலம்
1.	திரு. பராக்கிரம தஹநாயக்க	தலைவர்	24.01.2020 இலிருந்து இன்று வரை
2.	திரு. சுனில் தஹநாயக்க	பணிப்பாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி	19.08.2020 இலிருந்து இன்று வரை
3.	திரு. டப்ளியூ. ஆர். பி. அனுருத்த	கணக்கியல் உத்தியோகத்தர்	17.07.2017 இலிருந்து இன்று வரை
4.	திரு. எல். ஏ. தரங்க பு'பகுமார	அபிவிருத்தி உத்தியோகத்தர் - செயற்திட்ட உதவியாளர்	01.08.2006 இலிருந்து இன்று வரை
5.	திருமதி. பி.ஜீ.என். சந்திமாலி	அபிவிருத்தி உத்தியோகத்தர் - செயற்திட்ட உதவியாளர்	01.08.2006 இலிருந்து இன்று வரை
6.	எஸ். பி. திருமதி லோக்குலியன	அபிவிருத்தி உத்தியோகத்தர் - செயற்திட்ட உதவியாளர்	01.08.2006 இலிருந்து இன்று வரை
7.	திருமதி. ரித்மி நானயக்கார	அபிவிருத்தி உத்தியோகத்தர் - செயற்திட்ட உதவியாளர் (கணக்கியல்)	12.05.2020 இலிருந்து இன்று வரை
8.	பீ. எஸ். திருமதி இல்லேபெரும	முகாமைத்துவ உதவியாளர்	02.11.2005 இலிருந்து இன்று வரை
9.	செல்வி. டப்ளியூ. டீலானி ஹர்சிகா	முகாமைத்துவ உதவியாளர்	01.09.2015 இலிருந்து இன்று வரை
10.	திருமதி. எம். எச். இ'ானி பிரியதர்'னி	முகாமைத்துவ உதவியாளர்	01.09.2015 இலிருந்து இன்று வரை
11.	திருமதி. எம். எச். பாத்திமா பௌஸானா	முகாமைத்துவ உதவியாளர்	01.09.2015 இலிருந்து இன்று வரை
12.	திரு. ஏ. ஜி. சமன் குமார	காரியாலய காரிய உதவியாளர்	03.12.2012 இலிருந்து இன்று வரை
13.	திரு. எம். எல். எஸ். ஜெயசேகர	நடமாடும் பாதுகாப்புக் காவலர்	03.12.2012 இலிருந்து இன்று வரை
14.	திரு. டப்ளியூ. ஜீ. நந்தன சமன்	நடமாடும் பாதுகாப்புக் காவலர்	03.12.2012 இலிருந்து இன்று வரை
15.	திரு. எம். என். ஈ. சிரந்த டி சில்வா	ஓட்டுனர்	03.12.2012 இலிருந்து இன்று வரை

1.6.3. 2021 இல் உத்தியோகத்தர் குழுவில் இடம்பெற்ற மாற்றங்கள்

காலி மரபுரிமை மன்றத்தின் நிர்வாக அதிகாரி திருமதி. சீதா பி. லியனகே அவர்களின் சேவைக்காலம் 04.09.2020 ஆந் திகதி நிறைவுபெற்றது. 05.09.2020 தொடக்கம் 31.12.2020 ஆந் திகதி வரை நிர்வாக அதிகாரிக்கான பதவி வெற்றிடமாகவுள்ளது.

01.03.2021 தொடக்கம் 31.08.2020 வரையான 06 மாத காலப்பகுதிக்கு முகாமைத்துவ உதவியாளர் பதவியில் சேவையாற்றி வரும் திருமதி. பீ. எஸ். இல்லேபெருமவுக்கு வெற்றிடமாக உள்ள நிர்வாக அதிகாரி பதவியின் பதிற் கடமைகள் ஒதுக்கப்பட்டன.

08.04.2021 தொடக்கம் தேசிய மரபுரிமைகள், நிகழ்த்துக்கலைகள் மற்றும் கிராமியக் கலை மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சினால் அபிவீருத்தி உத்தியோகத்தர் தரம் ஐஐஐ ஐச் சேர்ந்த திரு. ஆர்.ஆர்.என். ரணசிங்க மற்றும் திரு. ஆர்.ஏ.என்.ஜி. மதுசங்க ஆகியோர் காலி மரபுரிமை மன்றத்தின் செயற்திட்ட உதவியாளர் பதவிக்கு இணைக்கப்பட்டுள்ளனர்.

1.6.4 காலி மரபுரிமை மன்றத்தில் பணிபுரிந்த தலைவர்கள்

தொடர் இல.	பெயர்	சேவை ஆரம்பிக்கப்பட்ட வருடம்	சேவை நிறைவுற்ற வருடம்
1.	கௌரவ திரு. ரூபா கருணாதிலக, காலி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர்	1994	1994
2.	கௌரவ கலாநிதி நெவில் கனகரெத்ன தென் மாகாண ஆளுனர்	1994	2000
3.	பேராசிரியர் ரிசட் பதிரன, காலி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சர்	2000	2002
4.	திரு. ரியென்சி விஜேதிலக தலைவர், ஹற்றன் நேசனல் பேங்க்	2002	2003
5.	திரு. வஜிர அபேவர்தன, காலி மாவட்டபாராளுமன்ற உறுப்பினர் மற்றும் கௌரவ அரச நிர்வாக அலுவல்கள் அமைச்சர்	2003	2004
6.	திரு. ஜீ.எச். அஜித் குமார காலி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்	2004	2007
7.	திரு. பராக்கிரம தகநாயக காலி மாநகர சபை உறுப்பினர்	2007	2015
8.	திரு. ரம்ய சிரிவங்சஓய்வுபெற்ற அரச அதிபர்	2015	2016
9.	திரு. சன்ன தாஸ்வத்த பட்டயக் கட்டிடக் கலைஞர்	.2016	.2019
10.	திரு. பராக்கிரம தகநாயக காலி மாநகர சபை உறுப்பினர்	2020	இன்று வரை

1.6.5 காலி மரபுரிமை மன்றத்தில் பணிபுரிந்த பிரதம நிறைவேற்று அதிகாரிகள்

தொடர் இல.	பெயர்	சேவை ஆரம்பிக்கப்பட்ட வருடம்	சேவை நிறைவுற்ற வருடம்
1.	திரு. பி. ஹேவாவசம் முன்னாள் அரச அதிபர்	15.12.2001	01.04.2004
2.	திரு. பி. விஜேரத்ன முன்னாள் மேலதிக அரச அதிபர்	28.06.2004	31.12.2005
3.	திரு. ஓ.எஸ்.என். டி சில்வா முன்னாள் பிரதேச முகாமையாளர், இலங்கை வங்கி	12.01.2006	28.02.2007
4.	திரு. எச்.எல். குணவர்தன முன்னாள் பிரதேச செயலாளர், காலி நான்கு கடவைகள் பிரதேச செயலகம்	11.04.2007	20.04.2018
5.	திருமதி. டி.கே.எஸ். ஜயலக்'மி முன்னாள் பிரதேச செயலாளர், பத்தேகம	29.04.2019	25.04.2020
6.	திரு. சுனில் தஹநாயக்க முன்னாள் பிரதிப் பிரதம செயலாளர் (நிதி முகாமைத்துவம்), தென் மாகாண சபை	19.08.2020	இன்று வரை

1.6.6 காலி மரபுரிமை மன்றத்தில் பணிபுரிந்த நிர்வாக அதிகாரிகள்

தொடர் இல.	பெயர்	சேவை ஆரம்பிக்கப்பட்ட வருடம்	சேவை நிறைவுற்ற வருடம்
1.	திரு. ஹேமநாத் குணவர்தன	01.03.2001	31.10.2003
2.	திரு. பி.ஏ. கருணாசேன	25.03.2004	31.12.2005
3.	திருமதி. சீதா பி. லியனகே	02.01.2006	04.09.2020

1.7 காலி மரபுரிமை மன்றத்தின் நிர்வாகம் மற்றும் முகாமைத்துவம்

1994 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க காலி மரபுரிமை மன்றச் சட்டத்தின் பிரிவு 5 இன் படி மன்றத்தின் நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ அதிகாரங்கள் முகாமைத்துவச் சபைக்கு வழங்கப்பட்டுள்ளன.

1.7.1 2021 ஆம் ஆண்டுக்கான முகாமைத்துவ சபையின் அமைப்பு பின்வருமாறு:-

அதிகாரபூர்வமாக நியமிக்கப்பட்ட அங்கத்தவர்கள்

தொடர் இல.	புதவி	முகவரி
1.	காலி மாவட்ட செயலாளர் ∴ அரச அதிபர்	மாவட்ட செயலகம், காலி
2.	தொல்பொருளியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம்	கொழும்பு 7
3.	நகர அபிவிருத்தி அதிகார சபைத் தலைவர்	செத்சிரிபாய, பத்தரமுல்லை
4.	இலங்கை துறைமுக அதிகார சபையின் தலைவர்	இல. 19, பள்ளி வீதி, கொழும்பு - 01
5.	கடற்கரை பாதுகாப்பு திணைக்களத்தின் பணிப்பாளர்	4ஆம் மாடி,கடற்றொழில் அமைச்சுக் கட்டிடம், புதிய செயலகம், மாளிகாவத்தை, கொழும்பு 10.
6.	மத்திய கலாசார நிதியத்தின் பணிப்பாளர் நாயகம்	இல. 212∴1, பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு 07
7.	பிரதேச செயலாளர், காலி நான்கு கடவைகள்	வக்வெல்ல வீதி , காலி
8.	காலி மாநகர சபையின் கௌரவ நகர பிதா	காலி மாநகர சபை
9.	தொல்பொருளியல் முதுகலை நிறுவனத்தின் பணிப்பாளர்	தொல்பொருளியல் முதுகலை நிறுவனம், இல. 407, பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு 07
10.	தேசிய நீரியல் ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைவர்	தேசிய நீரியல் ஆராய்ச்சி நிறுவனம், காக்கா தீவு, மட்டக்குளி, கொழும்பு 15
11.	மொரட்டுவை பல்கலைக்கழகத்தின், நினைவுச்சின்னங்கள் மற்றும் தளங்களின் கட்டிடக்கலை அம்சங்களை பாதுகாத்தல் பிரிவின் (ஐஊழுஆயுளு) பணிப்பாளர்	கட்டிடக்கலைப் பிரிவு, மொரட்டுவை பல்கலைக்கழகம், மொரட்டுவை
12.	தென் மாகாண கலாசார அலுவல்கள் அமைச்சர்	அலுவல தக்'ணபாய, லபுதுவ, காலி
13.	தேசிய அருங்காட்சியகங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர்	சேர் மார்க்ஸ் பெர்னாந்து மாவத்தை, கொழும்பு 07
14.	இலங்கைக்குரிய நெதர்லாந்து முன்னாள் மாணவர் சங்கத்தின் தலைவர்	இல. 05, குமார வீதி, கொழும்பு 11

அமைச்சரினால் நியமிக்கப்பட்ட அங்கத்தவர்கள்

தொடர் இல.	பெயர்	முகவரி	சுபையில் இணைக்கப்பட்ட திகதி
1.	திரு. பராக்கிரம தகநாயக்க	இல. 225, எஸ்.எச். தகநாயக்க மாவத்தை, காலி	21.01.2020
2.	திரு. எம். எஸ். சந்திரசிரி	இல. 19 ஏ, ரம்பாட் வீதி, காலி	21.01.2020
3.	திரு. பந்துல நானயக்கார	போலகிந்துஹேன, கப்புகம, தேவேந்திரமுனை மேற்கு	21.01.2020
4.	திரு. அ்லி டி வோஸ், பட்டயக் கட்டிடக்கலைஞர்	இல. 121, டபிள்யூ.ஏ.டி. ராமநாயக்க மாவத்தை, கொழும்பு 2	21.01.2020
5.	சட்டத்தரணி செல்வி. நாலினி அபேவர்தன	இல. 3, பள்ளி குறுக்கு வீதி, கோட்டை, காலி	21.01.2020
6.	சட்டத்தரணி லலித் பதிரண	இல. 63, கலங்கரை விளக்கு வீதி, கோட்டை, காலி	21.01.2020

முகாமைத்துவ சபை அங்கத்தவர்களால் தெரிவு செய்யப்பட்டு நியமிக்கப்பட்ட அங்கத்தவர்கள் (இவர்களது சேவைக்காலம் இரண்டு வருடங்களாகும்)

தொடர் இல.	பெயர்	முகவரி	சுபையில் இணைக்கப்பட்ட திகதி
1.	திரு. ஜயதிஸ்ஸ ஹேரத், தலைவர் ஜஊழுஆயுளு , இலங்கை	இல. 317.்.3, வேகந்த வீதி, ஹபரக்கடை, ஹோமாகம	28.07.2019 - 27.07.2021
2.	கலாநிதி. நிலன் கூறே பட்டயக் கட்டிடக்கலைஞர்	இல. 111.்.1, டி மெல் மாவத்தை, கட்டுபெத்தை, மொரட்டுவ	28.07.2019 – 27.07.2021
3.	கலாநிதி. பி.என். மீகஸ்வத்த செயலாளர் நாயகம், யுனெஸ்கோவின் தேசிய ஆணைக்குழு	யுனெஸ்கோவின் இலங்கைக்குரிய தேசிய ஆணைக்குழு, இசுருபாய, பத்தரமுல்லை	28.07.2019 – 27.07.2021
4.	திரு. நுவான் ஜே. வெதசிங்க, பிரதிப் பொலிஸ் மா-அதிபர், காலி மாவட்டம்	பிரதிப் பொலிஸ் மா-அதிபர் காரியாலயம், கோட்டை, காலி	29.10.2020
5.	திருமதி. டிலேகா குடாச்சி, ஆளுனரின் செயலாளர்	ஆளுனர் அலுவலகம், கீழ் டிக்சன் வீதி, காலி	27.08.2020
6.	திரு. டபிள்யூ.எச். விஜேரத்ன முன்னாள் தலைவர் அரசாங்க சேவை ஆணைக்குழு, தென் மாகாணம்	மாவட்ட செயலகம், காலி	28.07.2019 – 27.07.2021

II அத்தியாயம்


2021 இல் காலி மரபுரிமை மன்றத்தால் செயற்படுத்தப்பட்ட திட்டங்கள்


காலி மரபுரிமை மன்றம் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து வருடா வருடம் ஆற்றிவரும் பணிகளை எண்ணிப் பார்க்கும் போது, நாட்டிற்கும் குறிப்பாக காலிக் கோட்டை வாழ் மக்களுக்கும் குறிப்பிடத்தக்க சேவையை ஆற்ற முடிந்ததையிட்டு நாம் மகிழ்ச்சியடைகின்றோம்.

2.1 பொது நிகழ்ச்சிகள்

2.1.1 புதுவருடத்தைக் கொண்டாடுதல் - 01.01.2021

புத்தாண்டின் ஆரம்பத்தை முன்னிட்டு காலி மரபுரிமை மையத்தில் பாரம்பரிய எண்ணெய் விளக்கு ஏற்றி பிரித் ஓதும் வைபவம் ஒழுங்குசெய்யப்பட்டது. மன்றத்தின் அனைத்து ஊழியர்களும் ஏனைய நிறுவனங்களிலிருந்து வருகை தந்திருந்தவர்களும் பங்கேற்றனர். அனைவருக்கும் பாரம்பரிய சிற்றுண்டி வகைகள் பரிமாறப்பட்டன. வருடாவருடம் இடம்பெறும் இந்நிகழ்வில் பணியாளர்கள் செலவுகளை ஏற்றுக்கொண்டு வருட நிகழ்வுகளை ஆரம்பித்து வைத்தல் சிறப்பம்சமாகும்.









2.2 அபிவிருத்திச் செயற்றிட்டங்கள்

2.2.1 காலி மரபுரீமை மன்றத்தின் பிரதான அலுவலகம் அமைந்துள்ள கட்டிடத்தை புனரமைக்கும் செயற்றிட்டம்

காலி மரபுரிமை மன்றத்தின் அலுவலகம் காலி கோட்டையின் ராம்பாட் தெருவில் இல. 12 இல் அமைந்துள்ள கட்டிடத்தில் உள்ளது. இந்தக்கட்டிடம் ஒல்லாந்தக் காலத்தில் வெடிமருந்துகள் அரைக்கும் ஆலையாக பயன்படுத்தப்பட்ட ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க கட்டிடமாகும். பின்னர் இக்கட்டிடம் ஆங்கிலேயர் காலத்தில் ஓர் உயர் அதிகாரியின் வாசஸ்தலமாக பயன்படுத்தப்பட்டது. இந்தக் கட்டிடத்தை அலுவலமாக பயன்படுத்த சில அத்தியாவசியப் பராமரிப்புப் பணிகள் செய்ய வேண்டியிருந்தது. அதன்படி, தொல்பொருளியல் திணைக்களத்தின் அறிவுறுத்தலுக்கு அமைவாகவும் அவர்களின் மேற்பார்வையின் கீழும் இக்கட்டிடத்தின் பின்வரும் அத்தியாவசியத் திருத்தப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

1. அலுவலகக் கழிப்பறைத் தொகுதி நவீனமயப்படுத்தப்பட்டமை.
2. அலுவலகக் கூரை திருத்தப்பட்டமை
3. உள் மற்றும் வெளிப்புறச் சுவர்களின் பூச்சுக்கள் மீண்டும் பூசப்பட்டமை
4. கதவுகள் மற்றும் ஜன்னல்கள் பழுது பார்க்கப்பட்டு மீண்டும் வண்ணம் தீட்டப்பட்டமை
5. முலதன இயல்புடைய பராமரிப்பு வேலைகள் (நீர் வழங்கல் அமைப்பைச் சரிசெய்தல்)

2.2.2 காலிக் கோட்டையில் அரச நிறுவனங்களுக்குச் சொந்தமான பாரம்பரியக் கட்டிடங்களைப் பேணிப் பாதுகாக்கும் திட்டங்களைத் தயாரித்தல்

காலிக் கோட்டையில் அரச நிறுவனங்களின் அலுவலகங்களாகப் பயன்படுத்தப்பட்டு வரும் குறிப்பிடத்தக்க பாரம்பரிய மதிப்புள்ள பல பழைய கட்டிடங்கள் உள்ளன. இவற்றுள் சில ஒல்லாந்தக் காலத்தைச் சேர்ந்தவை. அத்தகைய கட்டிடங்கள் பழுதுபார்க்கப்பட்டால் அல்லது புதுப்பிக்கப்பட்டால் அவற்றின் பாரம்பரிய அம்சங்கள் பாதுகாக்கப்படவேண்டியது அவசியம். இந்த நோக்கத்துடன் காலி மரபுரிமை மன்றம் அத்தகைய கட்டிடங்களைப் பாதுகாக்கும் வேலைத்திட்டங்களை தயாரிப்பதில் முனைப்புச் செலுத்தியது. இச்செயற்திட்டத்தின் கீழ் அத்தகைய ஆறு கட்டிடங்களைப் பாதுகாப்பதற்கானத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு இச்செயற்பாடுகள் மதிப்பாய்விற்கு உட்பட்ட ஆண்டில் நிறைவு செய்யப்பட்டன. இதற்கான மீதமுள்ள கொடுப்பனவு இந்த ஆண்டில் வழங்கப்பட்டது.

2.2.3 பழைய பொலிஸ் குடியிருப்புக் கட்டிடத்தை பேணுதல்

மேற்கூறிய கட்டிடத் தொகுதியை பேணுவதற்கான கொள்முதல் செயல்முறை காலிக் கோட்டைக்கான திட்டமிடல் துணைக்குழுவினால் ஒப்புதல் அளிக்கப்பட்டு, நகர அபிவிருத்தி அதிகாரசபையால் ஏப்ரல் 2021 இல் இறுதிக் கட்டிட அனுமது வழங்கப்பட்ட பிறகு தொடங்கப்பட்டது.

ஆரம்பக் கொள்முதற் செயல்முறை முடிந்ததும், விலை மனுக்கோரும் ஆவணங்கள் தேசிய மரபுரிமைகள், நிகழ்த்துக்கலைகள் மற்றும் கிராமியக் கலை மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சினால் நியமிக்கப்பட்ட தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டன. இருப்பினும், சில தொழில்நுட்பத் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டியதன் அவசியத்தின் காரணமாக ஆண்டின் இறுதி வரை அமைச்சக கொள்முதல் குழுவால் உரிய ஒப்பந்தத்தை வழங்க முடியவில்லை.

இருப்பினும், ஒப்பந்தம் வழங்கப்பட்டு 2022 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் பணிகள் ஆரம்பிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.


இந்தத் திட்டம் ஒரு பெரிய வருமானம் ஈட்டும் முயற்சியாக தொடங்கப்பட்டது. இது நிறைவடைந்தவுடன், காலி மரபுரிமை மன்றம் முழுமையானதொரு சுய-நிலைபெறு நிறுவனமாக மாறுமென எதிர்பார்க்கப்படுகிறது.


2.2.4 காலிக் கோட்டையினுள் குறுந்தெருக்களை அபிவிருத்தி செய்தல்

காலிக் கோட்டையில் பின்வரும் மூன்று பழைய குறுந்தெருக்கள் பாவுகற்கள் கொண்டு நிர்மாணிக்கும் வேலைகள் 2021 இல் ஆரம்பிக்கப்பட்டு நிறைவுபெற்றன.


1. புதிய தெரு 1 ஐத் தொடுக்கும் குறுந்தெரு
2. பறவ வீதியைத் தொடுக்கும் குறுந்தெரு
3. ராம்பாட் வீதியைத் தொடுக்கும் குறுந்தெரு

இக்குறுந்தெருக்களை மேம்படுத்துதல் காலிக் கோட்டையின் சூழலை தூய்மையாகவும் அழகாகவும் மாற்றுவதற்குப் பங்களித்துள்ளது.












2.2.5 உள்ளூர் உணவு விற்பனை நிலையம் "காலு பொஜுன"

பாலதக' மாவத்தையில் காலிக் கோட்டையின் பழைய ஒல்லாந்தர் நுழைவாயிலுக்கு அருகில் உள்ள சிப்னாரா கட்டிடத்தின் ஒரு பகுதியில் இயங்கி வந்த உள்ளூர் உணவு விற்பனை நிலையம் சில வருடங்களாக இயங்கவில்லை. காலி மரபுரிமை மன்றம் அதனை காலு பொஜுன எனும் பெயரில் புதுப்பிக்க விரும்பியது. கட்டிடத்தில் தேவையான பழுதுபார்க்கும் பணிகள் முடிவடைந்துள்ளதுடன் பொருத்தமான முதலீட்டாளரைத் தேர்ந்தெடுத்து அடுத்த ஆண்டு தொடக்கத்தில் உணவு விற்பனை நிலையம் திறக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது சுத்தமான மற்றும் சுவையான உணவை உள்ளூர் மற்றும் வெளிநாட்டு வாடிக்கையாளர்களுக்கு நியாயமான விலையில் வழங்கும். இதன்மூலம் காலி மரபுரிமை மன்றத்தின் வருமானமும் அதிகரிக்கும்.








2.2.6 சந்திரக் காட்சிக்கூடத்தின் வளர்ச்சி

சில வருடங்களுக்கு முன்னர் காலி மரபுரிமை மன்றம் காலிக் கோட்டையின் சந்திரக் காவலரணில் உள்ள நிலவறையை முழுமையாகப் பாதுகாத்து அதனைச் சந்திரக் காட்சியகமாக மாற்றியமைத்தது. அங்கு, காலியின் வரலாற்றைச் சித்தரிக்கின்ற பிரபல ஓவியரும் சிற்பியுமான சுதத் அபேசேகரவினால் செதுக்கப்பட்ட 12 சிலைகளும், திரையில் வரையப்பட்ட 16 ஓவியங்களும் காட்சிப்படுத்தப்பட்டன. காலி கோட்டைக்கு வரும் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு பார்வையாளர்களுக்கு புதிய அனுபவத்தை வழங்குவதே இதன் நோக்கமாகும். இருப்பினும், சில வருடங்களுக்கு முன்னர் நிர்வாகமானது காட்சிக்கூடத்தை மேம்படுத்த முடிவு செய்திருந்தது. அதன்படி, பிரபல ஓவியர் அனுர ஸ்ரீநாத்தின் 65 கார்ட்டூன் ஓவியங்கள் தயாரிக்கப்பட்டு காட்சிக்கூடத்தில் சித்தரிக்கப்பட்டுள்ள காலியின் கதையை மேலும் விரிவுபடுத்தியது. இந்தக் காட்சிக்கூடம் தற்போது பொதுமக்கள் பார்வைக்கு திறக்கப்படுவதற்கு தயாராக உள்ளது.







2.2.7 காலிக் கோட்டையில் கலங்கரை விளக்கத்திற்கு அருகில் கடல் நீராடும் இடத்தின் அபிவிருத்தி

தேசிய மரபுரிமைகள், நிகழ்த்துக்கலைகள் மற்றும் கிராமியக் கலை மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர், கௌரவ விதுர விக்கிரமநாயக்க அவர்களின் ஆலோசனையின் பேரில் மேற்கூறப்பட்ட கடல் நீராடல் பகுதியை பாதுகாப்பானதாகவும் பாவனையாளர்களுக்கு வசதியாகவும் மாற்றுவதற்கு காலி மரபுரிமை மன்றத்தால் பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

- நீச்சல் மற்றும் குளிப்பதற்கு பாதுகாப்பான மற்றும் பாதுகாப்பற்ற பகுதிகளை வரையறுப்பதற்கு மிதவைகள் மற்றும் கொடிகள் நிறுவப்பட்டமை.
- கடற்கரைப் பகுதியில் உடை மாற்றுவதற்கு தற்காலிக அறைகள் அமைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளமை.








2.2.8 காலி மரபுரிமைகள் மன்றத்தின் சுற்றுலாப் பயணிகள் தகவல் மையத்தின் மேம்பாடுகள்

மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் காலி மரபுரிமை மன்றத்தின் சுற்றுலாப் பயணிகள் தகவல் மையத்திற்குப் பின்வரும் மேம்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

1. வேளிப்புறச் சுவர்கள் மீண்டும் பூசப்பட்டமை
2. ஜன்னல்கள் மற்றும் கதவுகள் உட்பட முழுக்கட்டிடத்திற்கும் மீண்டும் வண்ணம் பூசப்பட்டமை
3. கட்டிடத்தின் இடது பக்கச் சுவர் மற்றும் பின்புற பாதுகாப்புச் சுவரை சரிசெய்தல்









2.3 ஏனைய நிகழ்வுகள்

2.3.1 கலைப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்குதல்


1988 டிசம்பர் மாதம் 9 ஆந் திகதி யுனெஸ்கோவினால் காலிக் கோட்டை உலக மரபுரிமைகள் சின்னங்களின் பட்டியலில் பொறிக்கப்பட்டது. இந்த நிகழ்வை நினைவுகூரும் முகமாக 2019 ஆம் ஆண்டு ஒக்டோபர் 15 ஆந் திகதி காலிக் கோட்டைக்குள் இருக்கும் சவுத்லேண்ட்ஸ் பெண்கள் கல்லூரி மற்றும் ஓல் செயின்ட்ஸ் கல்லூரி மாணவர்களுக்கிடையே கலைப் போட்டியொன்று இடம்பெற்றது. கொவிட் - 19 தொற்று நோய் காரணமாக வெற்றியாளர்களுக்குப் பரிசுகள் வழங்குதல் தாமதமடைந்தது. எவ்வாறாயினும், இறுதியாக 2021 மார்ச் 12 ஆந் திகதி காலி மரபுரிமைகள் மன்றத்தின் அலுவலகத்தில் இடம்பெற்ற எளிய விழாவில் தலைவராலும் பணிப்பாளராலும் பரிசுகள் வழங்கப்பட்டன. இப்போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களின் பெற்றோர்கள் மற்றும் இரு பள்ளிகளின் ஆசிரியர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.






2.3.2 இராஜாங்க அமைச்சரின் விஜயம்


2021 ஜனவரி மாதம் 2 ஆந் திகதி தேசிய மரபுரிமைகள், நிகழ்த்துக்கலைகள் மற்றும் கிராமியக் கலை மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் கௌரவ விதுர விக்கிரமநாயக்க அவர்கள் காலி மரபுரிமை மன்றத்தின் காரியாலயத்துக்கு விஜயம் செய்து உலக வங்கியின் நிதியுதவியில் மூலோபாய நகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுவரும் காலிக்கோட்டை பற்றிய பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டங்கள் பற்றியும் மன்றத்தின் பணிகள் குறித்தும் கலந்துரையாடினார். இக்கலந்துரையாடலில் அரசியல் பிரதிநிதிகளான பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ சந்திம வீரக்கொடி, கௌரவ இசுரு தொடங்கொட மற்றும் காலி நகரபிதா கௌரவ பிரியந்த சஹபந்து ஆகியோரும், காலி மரபுரிமை மன்றத்தின் தலைவர் மற்றும் பணியாளர்களும் பங்குபற்றினர். கலந்துரையாடலைத் தொடர்ந்து அமைச்சர் காலிக்கோட்டையில் களவிஜயம் ஒன்றை மேற்கொண்டார்.






2.3.3 இராஜாங்க அமைச்சின் செயலாளரின் விஜயம்




2021 ஜூலை 26 ஆந் திகதி தேசிய மரபுரிமைகள், நிகழ்த்துக்கலைகள் மற்றும் கிராமியக் கலை மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சின் செயலாளர் திருமதி கே.ஏ.டி.ஆர். நி'ாந்த ஜயசிங்க அவர்கள் அமைச்சின் பல அதிகாரிகளுடன் காலி மரபுரிமை மன்றத்தின் அலுவலகத்துக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டார். அவர்கள் காலி மரபுரிமை மன்றத்தின் தலைவர் மற்றும் ஊழியர்களுடன் மன்றத்தில் நடைபெற்று வரும பணிகள் மற்றும் நிகழ்ச்சிகள் குறித்து கலந்துரையாடினர்.





2.3.4 இராஜாங்க அமைச்சர் மற்றும் செயலாளரின் விஜயமும் கள ஆய்வும்

2021 ஆகஸ்ட் 13 ஆந் திகதி தேசிய மரபுரிமைகள், நிகழ்த்துக்கலைகள் மற்றும் கிராமியக் கலை மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் கௌரவ விதுர விக்கிரமநாயக்க, அமைச்சின் செயலாளர் திருமதி கே.ஏ.டி.ஆர். நி'ாந்த ஜயசிங்க மற்றும் அமைச்சின் அதிகாரிகளும் காலி மரபுரிமை மன்றத்தின் அலுவலகத்துக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டு வருடத்திற்கான வேலைத்திட்டங்களின் முன்னேற்றம் தொடர்பாக தலைவர் மற்றும் பணியாளர்களுடன் கலந்துரையாடினார்கள். ஆதனைத் தொடர்ந்து அமைச்சர் மற்றும் அமைச்சின் அதிகாரிகள் காலி மரபுரிமை மன்றத்தின் ஊழியர்களுடன் காலிக் கோட்டையில் கள ஆய்வொன்றில் ஈடுபட்டனர்.


காலி மரபுரிமை மன்றம் - 2021

01. நிதிக்கூற்றுக்கள்

1.1 அபிப்பிராயம்

காலி மரபுரிமை மன்றத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை முலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புகள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 154(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலமைப்புச் சட்டத்தின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

காலி மரபுரிமை மன்றத்தின் நிதிக்கூற்றுக்கள், 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையொன்றினை வழங்குவதற்காக என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வு சான்றுகள் போதுமானவை மற்றும் பொருத்தமானவை என நான் நம்புகின்றேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிழை கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, காலி மரபுரிமை மன்றத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பிடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது காலி மரபுரிமை மன்றத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

காலி மரபுரிமை மன்றத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம், காலி மரபுரிமை மன்றத்தின் வருடாந்த மற்றும் காலாீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு பேரவை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு மன்றத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பான அறிவினை பெற்றுக்கொள்ளப்பட்ட போதிலும், உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் அபிப்பிராயமொன்றினை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை

காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான அற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது மன்றத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது மன்றத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்,

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளமை.

1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பிலான கணக்காய்வு அவதானிப்புகள்

1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்களின் முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் நடைமுறைப்படுத்தல், உரிய நிதியிடல் நியமங்களுக்கிணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்கான கணக்கறிக்கையை பேணுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் குறிப்பான அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களுக்கு பிரவேசித்தல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணகளித்தகைமை பேணப்பட்டு சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியினுள் ஒப்பிடல் மற்றும் வேறுபாடுகள் காணப்படுமாயின் அவை தொடர்பில் உரிய நடவடிக்கை எடுத்தல் ஆகியவற்றுக்காக நியாயமான உறுதிப்பாடொன்றை பெற்றுக்கொள்ள போதியளவான "சிறப்பான முறையில் திட்டமிடப்பட்ட" உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு கட்டமைப்பொன்றினை நிறுவனத்தினால் நடாத்திச் செல்லப்படல் அவசியமானதாகும்.

1.5.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு	இணக்கமின்மை	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 41(1) பிரிவு	கணக்காய்வு செய்யப்படும் ஒவ்வொரு நிறுவனத்திற்காகவும் சந்தர்ப்பத்திற்கு ஏற்ற வகையில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு தாபிக்கப்பட வேண்டிய போதிலும், காலி மரபுரிமை மன்றத்தினால் 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவொன்றினை நிறுவி நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.	கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களுக்காக பின்வரும் உத்தியோகத்தர்களை கொண்ட குழுவொன்று 2021 ஏப்ரல் 21 ஆந் திகதி காலி மரபுரிமைகள் மன்றத்தின் பணிப்பாளர் மற்றும் தலைவருக்கு அனுப்பப்பட்ட உள்ளக கடிதத்தின் மூலம் முன்மொழியப்பட்டு அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டது.	2022 யூன் 30 ஆந் திகதி வரையிலும் முகாமைத்துவக் குழு தாபிக்கப்பட்டிருந்த போதிலும், இதுவரையிலும் நடைமுறைப்படுத்தியிராமையால் குழு தாபிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகளின் பிரகாரம், 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நடவடிக்கைகளின் பெறுபேறு ரூபா 584,118 ஆன பற்றாக்குறையாக இருந்ததுடன், அதனோடு ஒத்த கடந்த வருடத்தின் மிகையானது ரூபா 55,286 ஆகும். கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதிப் பெறுபேற்றில் ரூபா 639,404 அல்லது 1157 சதவீதமான வீழ்ச்சியொன்றினை காண்பித்தது. மீளாய்வாண்டின் அரச மானியங்கள் ரூபா 891,348 இனால் குறைவடைந்தமை அந்த நிதிப் பெறுபேற்றிலான வீழ்ச்சிக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

கணக்காய்வு அவதானிப்புகள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ) காலி மரபுரிமை மன்றத்திற்கு அதிகளவான அதிகாரத்தை பெற்றுக்கொள்ள மற்றும் மன்றத்திற்கான வருமானம் சட்டத்தினை அதிகரித்தல்	2018 ஆம் ஆண்டின் போது முன்னாள் அரசினால் காலி மரபுரிமைகள் மன்றத்திற்காக புதிய அதிகாரச்சட்டத்தினை தயாரிப்பதற்கு உரிய	அதிகாரச்சட்டத்தினை திருத்தியமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	ஆகிய நோக்கங்களுக்காக 1994 இன் 07 ஆம் இலக்க காலி மரபுரிமைகள் மன்ற அதிகாரச்சட்டத்தினை திருத்தியமைக்கும் தேவைப்பாடு இனங்காணப்பட்டு, அதற்காக 2015 ஆம் ஆண்டின் போது அமைச்சரவைப் பிரமாணக்குறிப்பு தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அந்த அதிகாரச்சட்டத்தில் திருத்தமொன்றை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	அடிப்படைப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதன்போது தற்போதைய அதிகாரச்சட்டத்தை திருத்துவதற்கு எதிர்பார்த்திராததுடன், தெற்கு அபிவிருத்தி அமைச்சின் தலைமையில் "Southern Forts Authority Act" ஆக புதிய அதிகாரச்சட்டத்தினை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. புதிய முகாமைத்துவச் சபை அந்த மன்றத்தினை திருத்தியமைப்பதற்கும், அதற்காக புதிய முன்மொழிவுகளை தயாரிப்பதற்கும் 2022 பெப்ரவரி 21 ஆந் திகதி நடாத்தப்பட்ட முகாமைத்துவ சபைக் கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டதுடன், அந்த முன்மொழிவுகளை அமைச்சிற்கு சமர்ப்பித்து அதிகாரச்சட்டத்தினை திருத்திமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.	
(ஆ)	காலி கடவத் சத்தர பிரதேச செயலகத்திடமிருந்து காலி மரபுரிமை மன்றத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த ரூபா 1,036.5 மில்லியன் பெறுமதியான காணி மற்றும் ரூபா 3.825 மில்லியனுக்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்த கட்டிடம் மாநகர சபை மற்றம் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சின் மூலோபாய நகர அபிவிருத்தி செயற்திட்டத்தின் பிரதி செயற்திட்டப் பணிப்பாளருக்கு காலிக் கோட்டையை பாதுகாக்கும் செயற்திட்டத்தின் ஒப்பந்த கம்பனிக்கு தற்காலிக இருப்பிடத்திற்காக கட்டிடம் ஒரு வருட காலத்திற்காக பயன்படுத்துவதற்கு அங்கீகாரம் வழங்கி அதன் காலத்தை நீடிப்பு செய்து 02 ½ வருட காலத்தினுள் ஒப்பந்தக் கம்பனி அங்கு	2021 ஆம் ஆண்டின் ஆரம்ப காலப்பகுதியில் இதன் பாதுகாப்பு பணிகள் ஆரம்பிக்கப்பட்டதுடன், திட்டங்களை அங்கீகரித்தல் தாமதமடைந்தமை, பொறியியல் மதிப்பீடுகளை தயாரித்தல் மற்றும் பெறுகை நடைமுறையின் தாமதங்கள் காரணமாக கட்டிடத்தின் பாதுகாப்பு அதுவரை தாமதமடைந்த போதிலும், தற்போது அதன் பாதுகாப்பு பணிகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	ஒப்பந்ததாரரின் குத்தகைத் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். வழங்கப்படும் மூலதன ஒதுக்கீடுகளில் எதிர்பார்த்த நோக்கங்களை அடைந்துகொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	தங்கியிருந்த போதிலும், ஒப்பந்த நிறுவனத்திடமிருந்து குத்தகை அறவிடப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, கட்டிடத்தினை பாதுகாப்பதற்காக 2021 ஆம் ஆண்டின் பாதீட்டு நிதியேற்பாடு ரூபா 7.85 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், குறித்த கட்டிடத்தில் ஒப்பந்ததாரர்கள் தங்கியிருந்தமையால் அதன் பழுதுபார்த்தல் பணிகளை மேற்கொள்ள மன்றத்தினால் முடியாதிருந்தது.	

3.2 தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்

கணக்காய்வு அவதானிப்புகள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
மீளாய்வாண்டினுள் 12 செயற்திட்டங்களுக்காக ரூபா 25.8 மில்லியன் ஒதுக்கீடு அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன், அதில் ரூபா 17.55 மில்லியன் மட்டுமே செலவிடப்பட்டது. அங்கீகரிக்கப்பட்ட நிதியேற்பாட்டில் ரூபா 12.05 மில்லியனான நிதியேற்பாடு ஒதுக்கப்பட்ட 04 செயற்திட்டங்களுக்காக ரூபா 1.22 மில்லியனான செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அந்த செயற்திட்டத்தை மேற்கொள்ளும் நோக்கம் நிறைவேறியிருக்கவில்லை.	பாதுகாப்பு திட்ட அங்கீகாரம் தாமதமடைதல், பொறியியல் மதிப்பீடுகளை தயாரிப்பதில் நிலவிய தாமதங்கள், பெறுகை நடைமுறை தாமதமடைந்தமை மற்றும் கொரோனா நிலைமையின் அடிப்படையில் அவ்வப்போது நாடு முடக்கப்பட்டமை காரணமாகும்.	வழங்கப்படும் நிதியேற்பாடுகளில் செயற்திட்டத்தின் நோக்கங்களை அடைந்துகொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். நிர்மாணங்களுக்கு முன்னர் அதனை நிறைவேற்றும் இயலுமை தொடர்பில் ஆராய வேண்டும்.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

கணக்காய்வு அவதானிப்புகள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
காலி மரபுரிமை மன்றத்தினால் 2021 ஆம் ஆண்டுக்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிரகாரம், ஆண்டிற்கான செயற்பாடுகளுக்காக மதிப்பிடப்பட்ட பெறுமதி மற்றும் உள்ளபடியாக மேற்கொள்ளப்பட்டிருந்த செலவினங்களிடையே கருத்திற்கொள்ளக்கூடிய அளவிலான விலகல் நிலவியதுடன், அந்த விலகலின் சதவீதம் 66 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையிலும் காணப்பட்டது.	பொலிஸ் உத்தியோகபூர்வ இல்லத்தின் பாதுகாப்பு தாமதமடைதல், ஆரம்ப திட்டங்களை அங்கீகரிக்கும் பணிகள் கொரோனா தொற்றுநோய் காரணமாக பெறுகை நடவடிக்கைகள் தாமதமடைந்தமை முன்னர் திட்டமிட்டவாறு செயற்பட முடியாமை இதற்கு காரணமாக அமையக்கூடும்.	வரவு செலவுத் திட்டத்தினை தயாரிக்கும் போது நிலவும் வளங்களின் அடிப்படையில் மற்றும் கிடைத்த தகவல்களின் அடிப்படையில் அடையக்கூடிய இலக்குகளின் அடிப்படையில் செயற்பட வேண்டும்.

2021 இல் காலி மரபுரிமை மன்றத்தின் செயற்திறன் தொடர்பான பிற சுருக்கமான அறிக்கை

- 2020 ஆம் ஆண்டுக்கான காலி மரபுரிமை மன்றத்தின் கணக்கு அறிக்கைக்கு கணக்காய்வாளர் நாயகத்திடம் இருந்து குறைசொல்லாத தணிக்கைக் கருத்து கிடைக்கப் பெற்றது.
- காலி மரபுரிமை மன்றத் தலைமை அலுவலகத்தால் நடாத்தப்படும் கட்டிடப் புனரமைப்பு வேலைத்திட்டத்தை முன்னெடுப்பது.
- காலி மரபுரிமை மன்றத்தைச் சாத்தியமானதும் தன்னிறைவு கொண்டதுமான நிறுவனமாக மாற்றும் நோக்கத்துடன் தேசிய மரபுரிமைகள், நிகழ்த்துக்கலைகள் மற்றும் கிராமியக் கலை மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சரின் விசேட ஆலோசகரான கலாநிதி பிரேமசிரி கமகே அவர்களின் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலுடன் ஒரு வணிகத் திட்டத்தைத் தயாரிப்பதில் காலி மரபுரிமை மன்றம் முனைந்தது.
- பின்வரும் திட்டங்கள் காலி மரபுரிமை மன்றத்துக்கு வருமானம் ஈட்டும் திட்டங்களாக அடுத்த ஆண்டின் ஆரம்பத்தில் தொடங்கப்பட உள்ளன:
  1) உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் கைவினைப் பொருட்கள், ஆடைகள் மற்றும் பிற பரிசுப் பொருட்களை விற்பனை செய்வதற்காக ட்ரைடன் காவலரணிலுள்ள அறைகளை வாடகைக்கு வழங்குதல்
  2) சிப்னாராக் கட்டிடத்தில் காலு பொஜுன எனப்படும் உள்ளூர் உணவு விற்பனை நிலையத்தைத் திறத்தல்
  3) பாழடைந்த காவற்துறைக் குடியிருப்புக் கட்டிடத்தைப் பாதுகாத்து உள்ளூர் கைவினைப் பொருட்கள், நகைகள் போன்றவற்றை விற்பனை செய்யும் வளாகமாகவும் மற்றும் உள்ளூர் உணவுகளை விற்பனை செய்யும் உணவகங்களாகவும் மாற்றுதல்